பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 8 வெள்ளிக்கிழமை (21-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 114

# மிகப் பலத்த பாதுகாப்புடன் தெற்கில் இன்று தேர்தல்!

## அமைதி பேண சந்திரிகா கோரிக்கை

கொழும்பு, மார்ச் 21

தென்னிலங்கையின் பதினேழு மாவட்டங்களிலும் 238 உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தல் குட்டிப் பொதுத் தேர்தல் என்று கூறுமளவுக்கு மிகப்பலத்த பாதுகாப்புக்களுடன் இன்று நடைபெறுகிறது.

அரசியல் வன்முறைகள் அதிக அளவிலும், மிக ஆவேசத்துடனும் நடந்த பின்னணியில் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பொலீஸாரும், கூடுதல் இராணுவத்தினரும் இன்றைய பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இன்றைய வாக்களிப்பு பாதிக்கப்படாமல் இருக்க அமைதி காக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் தேர்தல் நாளன்று அமைதியைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுள்ளார்.

தேர்தல் பாதுகாப்புக் கடமைகளில் சுமார் 30,000 பொலீஸார் ஈடுபடுத்தப் படுவர். தேர்தல் குழப்பங்களைத் தடுப்பதற்கு இராணுவத்தினரும் மேலதிகமாகப் பணியாற்றுவர்.

சகல வாக்களிப்பு நிலையங்களையும் உள்ளடக்கிப் பொலீஸார் அடிக்கடி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 940 பயணிகள் இன்று புறப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 21

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று கப்பல்கள் மூலம் 940 பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

சிவில் அலுவலகத்தில்பதிவு

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## பொ. ஐ. முன்னணிக் கூட்டத்தில்

## மேடைக்கு முன்பாக விழுந்த பாண் ஏற்படுத்திய பரபரப்பு!

கொழும்பு, மார்ச் 21

கண்டியில் நடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டு, கூட்ட மேடையைச் சூழ படையினர் நின்ற சமயம் மேடைக்கு முன்பாக பாண் துண்டு ஒன்று வந்து வீழ்ந்தது.

இதனால் கூட்டத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பாண் துண்டு போல அபாயகரமான பொருள் ஒன்று வீழ்ந்திருந்தால் பெரும் அனர்த்தம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் —

இந்தச் சம்பவம் பாதுகாப்பு வட்டாரங்களில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது என்றும் 'த ஐலண்ட்' பத்திரிகை தெரிவிக்கிறது. (இ-3-150)

## பொ. ஐ. முன்னணிக்கு கணிசமான இடங்கள்?

இன்று நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு கணிசமான அளவு இடங்கள் கிடைக்குமெனமதிப்பிடப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ. தே. க. அடுத்த படியாகவும் —

ஜே. வி. பி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன மூன்றாம் நான்காம் இடங்களையும் கைப்பற்றும் என்றும் — மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த தேர்தல்களிலும் பார்க்க ஜே. வி. பி. கூடுதல் இடங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அதிருப்தியாளர்கள் ஜே. வி. பிக்கு ஆதரவு அளிப்பதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## முச்சந்தி முரளி



அரசியலில் முந்தி அரிசி எடுத்தஇடம் இப்ப பாணுக்கு போல ...!

## மந்துவில் மேற்குப் பகுதியில் படையினர் சுற்றிவளைப்பு

### துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி!

தென்மராட்சி, மார்ச் 21

மந்துவில் மேற்குப் பகுதியில் புதன்கிழமை பிற்பகல் படையினர் தேடுதல் நடத்திய சமயம் கைக்குண்டுவீச்சுச் சம்பவம் இடம்பெற்றதாகவும் —

இச்சம்பவத்தையடுத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் இறந்ததாகவும் — தெரியவந்தது.

இந்த மரணம் குறித்து சாவகச்சேரி மரண விசாரணை அதிகாரி விசாரணை மேற்கொண்டார்.

சடலம் அடையாளம் காணப்படாதவிடத்து அரச செலவில் சடலத்தை அடக்கம் செய்யுமாறு மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார். (இ-117)

# ஸ்ரீமாவோவையும் அனுராவையும் கொலை செய்ய புலிகள் திட்டமாம்!

## நெதர்லாந்திலுள்ள இலங்கைத் தூதர் தகவல்

கொழும்பு, மார்ச் 21

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையும் —

அவரது மகனும், ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்காவையும் — கொலை செய்ய புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் தகவல் கிடைத்துள்ளதாம்.

நெதர்லாந்தில் உள்ள இலங்கைத் தூதுவர் கொழும்பில் உள்ள இரகசியப் பொலீஸ் பிரிவு பணிப்பாளர் ஹேமச் சந்திராவுக்கு இது தொடர்பாகத் தகவல் கொடுத்துள்ளார் என்று 'த ஐலண்ட்' ஆங்கிலப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் தடம் புரண்டது

கொழும்பு, மார்ச் 21

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த ''உடரட்ட மெனிக்கே'' ரயில் நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் தடம் புரண்டது.

இவ்விபத்தில் எவரும் காயமடையவில்லை.

ரயில் என்ஜின் மற்றும் 6 பெட்டிகள் பாதையை விட்டு விலகின.

இதன் காரணமாக மலைநாட்டுக்கான நேற்றைய ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன. (இ-3)

# காணாமற்போன ஹெலி தொடர்பான மர்மம் நீடிப்பு

## கடலில் விழ்ந்ததுக்கான அறிகுறி இல்லை

கொழும்பு, மார்ச் 21

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான 'எம்.ஐ. 24' ரக தாக்குதல் ஹெலிக்கொப்ரர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையின் போது காணாமற்போனது தொடர்பான மர்மம் நீடிக்கிறது.

இந்தக் ஹெலிக்கொப்ரர் அலம்பில் காட்டில் விழுந்து நொறுங்கவில்லை என்றும் —

இயந்திரக் கோளாறு காரணமாக அது தரையிறக்கப்பட்டிருக்கலாம் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாயாவதி தலைமையில் அரசு: உத்தரப் பிரதேசத்தில் பதவி ஏற்பு

லக்னோ, மார்ச் 21

பகுஜன்சமாஜ் கட்சித்தலைவர் செல்வி மாயாவதி உத்தரப்பிரதேச முதலமைச்சராக இன்று பதவி ஏற்கிறார்.

மாநிலத்தில் 5 மாதங்களுக்கு முன்பு நடந்த தேர்தலின் பின்னர் இடம்பெற்று வந்த பேச்சுக்களையடுத்து பகுஜன்சமாஜ் கட்சி — பாரதீய ஜனதாக்கட்சி கூட்டணி அரசுக்கு அவர் தலைமை வகிப்பார். (3 ஆம் பக்கமும் பார்க்க) (இ-3)

## வெளிவாரிப் பரீட்சை இங்கு

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சையை (ஜி. ஏ. கியூ) அடுத்த மாதம் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஈ. பி. டி. பி. யாழ். அலுவலகம் தெரிவித்தது.

இந்த பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வினாத்தாள்களின் எண்ணிக்கையை கணக்கிட வசதியாக, இப்பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் தமது பெயர், பதிவிலக்கம், தோற்றும் பாடங்கள் ஆகிய விவரங்களை நாளை சனிக்கிழமைக்குள் யாழ். பல்கலைக்கழகத்தில் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

தும்பளை, **நெல்லண்டைப் பத்திர காளி கோயிலில்** 97-01-23 ஆம் திகதியன்று ஆரம்பித்த கந்தபுராணப் படனம் 97-03-23 ஆம் திகதியன்று வள்ளியம்மை திருமணப் படலத்துடனும், கும்பச்சரிவுடனும் நிறைவு பெறும்.

விசேஷ அலங்காரத்துடன் ஸ்ரீமுருகன் - வள்ளி, தெய்வானை சமேதரராய் வீதி உலா வருவார். 97 - 03 - 24 ஆம் திகதியன்று உதயப் பூசையைத் தொடர்ந்து, வளர்ந்து கட்டி அன்னதானம் நடைபெறும். 97-03-25 ஆம் திகதியன்று ஸ்ரீ ஞானவைரவருக்கு விசேஷ பூசையும் சாந்தியும் நடைபெறும்.

வழிபடுவோர் வருகை தந்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

**சி. வாமதேவன்**
**செயலாளர்**
தும்பளை நெல்லண்டைப்
பத்திரகாளி அம்மன் கோயில்
வழிபடுவோர் சங்கம்.

[45919]

## G. A. Q. | 97/98 கல்வியாண்டு
## 1 st in Com.

**யாழ்ப்பாணம் பேராதனை** ] பல்கலைக்கழக விரிவுரைகள் (வெளிவாரியாக)

தகுதியுடையோர்

★ A/L இல் 3 பாடங்களில் சித்தியடைந்தோர் (கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்)

★ பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்

பல்கலைக்கழக பதிவுகள் எம்மால் செய்து தரப்படும் இரு பல்கலைக்கழகங்களுக்குமான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

★ A/L 1996 இல் பரீட்சை முடிவுகளைப் பெற்ற மாணவர் மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

★ விவரங்களையும், விண்ணபப்படிவங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

**S. அருள்நங்கை,**

**புதிய உயர்கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**கிளை: பிறைற்வே இன்ஸ்ரிரியூட்**
மூத்தவிநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை. (45909)

# விற்பனைக்கு

★ அப்பிள்பழம்
★ இஞ்சி
★ பிரம்புக்கூடை

அத்துடன் வெங்காயம், கிழங்கு பொதி செய்யக் கூடிய வலை (BAG) பேக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**சிவகுமார் ஸ்ரோர்ஸ்,**
**நியு நாதன் ஸ்ரோர்ஸ்**
282, ஆஸ்பத்திரி வீதி,
சத்திர சந்தி,
யாழ்ப்பாணம்.

(45929)

## சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்; 17 — 06 — 1915



மறைவு: 19 — 02 — 1997

அமரர்

**சுந்தரம் தெய்வானைப்பிள்ளை**

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (21-3-97)வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

57, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (45927)

# செய்திச் சாரம்

### கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஐ-)

### சாவகச்சேரியில் முதியோர் இல்லம்

சாவகச்சேரி, மார்ச் 21

''எமிலி ஏனர்ஸ்ரைன்'' ஞாபகார்த்த முதியோர் இல்லம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு கச்சாய் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. பிரதம விருந்தினர்களாக ஜேர்மன் நாட்டிலிருந்து வருகை தந்துள்ள எஸ். அல்பிரட்டும், இலங்கைப் பிரதிநிதி வணக்கத்திற்குரிய எஸ். சிதம்பரப்பிள்ளையும் கலந்துகொள்வர். (ஐ-31)

### தையல் பயிற்சி

செம்பியன்பற்று, மார்ச் 21

வடமராட்சி கிழக்குப் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்படுவோருக்கு தையல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகம் இதற்கான நடவடிக்கையை எடுத்திருந்தது. பயிற்சியைப் பூரணமாக முடித்த இருவருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

### வடமராட்சி கிழக்கில் உருளைக் கிழங்கு செய்கை வெற்றி

செம்பியன்பற்று, மார்ச் 21

வடமராட்சி கிழக்கில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட உருளைக் கிழங்குச் செய்கை வெற்றி அளித்துள்ளது. குடத்தனை, செம்பியன்பற்று, அம்பன், நாகர்கோவில் பகுதிகளில் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக விளைச்சல் கிடைத்துள்ளது. (ஐ-36)

### நீர் இறைக்கும் இயந்திரங்கள்

செம்பியன்பற்று, மார்ச் 21

புலோலி கமநலச் சேவை நிலையத்துக்கு விரைவில் 20 நீர் இறைக்கும் இயந்திரங்கள் கிடைக்கவுள்ளன. ஏற்கனவே நிலையத்தில் முற்பணம் செலுத்தியோருக்கு மட்டுமே அவை வழங்கப்படும் என்று அம்பன் விவசாய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஐ-36)

### அந்தோனியார் ஆலய திருத்த வேலை

குருநகர், மார்ச் 21

இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்த பாசையூர் புனித அந்தோனியார் ஆலய திருத்த வேலைகள் அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக பங்குத்தந்தை அருட் திரு. சாள்ஸ் கொலின்ஸ் அடிகள் தெரிவித்தார் (ஐ-51)

### மலேசியா பயணம்

நவாலி, மார்ச் 21

மட்டுவில் சாவகச்சேரி திருக்கணித பஞ்சாங்க கணிதர் 'வேதாகம சோதிட பூஷணம்' சிவ ஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் மலேசியா கோலாலம்பூர் ஸ்ரீ கந்த சுவாமி கோயிலில் இம்மாதம் நடைபெறவிருக்கும் மகா கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள அழைப்பின் பேரில் சென்றுள்ளார்.

மலேசியாவுக்கென கோலாலம்பூர் மத்திய நாட்டிற்கு இவரால் கணிக்கப்பட்ட 1997-98 ஆம் வருடங்களுக்கான புதுவருட திருக்கணித பஞ்சாங்க வெளியீட்டு வைபவத்திலும் இவர் பங்கேற்கிறார். (ஐ-100)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை இராசரத்தினம்
**(ரதி மில்ஸ், காரைநகர்)**

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் வசித்தவருமான இராசரத்தினம் 20-3-97 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற முன்னாள் யாழ். பிரபல வர்த்தகர் க. இ சின்னத்துரை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முகத்துவாரம் வர்த்தகர் கந்தையா – பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், ரதி [ஆசிரியை, வண்: நாவலர் மகாவித்தியாலயம்], கலைவாணி [ஆயுர்வேத வைத்தியர்], அருச்சுனன் [அருச்சுனா ஸ்ரோர்ஸ்,கோண்டாவில்), ஞானபண்டிதன்[கனடா], அருந்ததி [பிரான்ஸ்], வளர்மதி [பிரான்ஸ்], றோஜாமலர் [சுவிஸ்]. ஆனந்தநடேசன் [பிரான்ஸ்], யோகேஸ்வரி [பிரான்ஸ்], இன்பறோஜா [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராஜா, பரமானந்தசிவம் [புதிய சீமாட்டி – உரிமையாளர், நெல்லியடி], சிவமலர், ஜனனி [கனடா], தங்கவேலு [பிரான்ஸ்], கதிர்காமநாதன் ]பிரான்ஸ்], சூரியகுமார் [சுவிஸ்], சியாமளா [பிரான்ஸ்], யோகரட்ணம் [பிரான்ஸ்], நடராஜா [லண்டன்] ஆகியோரின் மாமனாரும், வாணி, சாரசி, சுதாகர், நிசாகர், சுமங்கலா, சுபத்திரா, குருநந்தன், மைக்கேல், சுஜனி, அனுஷா, சியாமளா, சுலக்ஷனா, சோபியா, சோனியா, வினுஷன், ஸ்ரீபன், ஸ்ரீலன், சிந்தூரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்20-3-97அன்றுஇல115 பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
**இ. அருச்சுனன்**
[மகன்]

115, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [9415]

## சார்ள்ஸ் அமிர்தநாயகம்
**(Charles Amirthanayagam)**

யாழ்ப்பாணம் இல. 57, 4 ஆம் குறுக்குத்தெருவில் வசித்த காலஞ்சென்ற திரு திருமதி பிலிப் சவிரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், றோசலின் ஞானேஸ்வரியின் அன்புக் கணவனுமாகிய சார்ள்ஸ் அமிர்தநாயகம் (பூராசா) 13-3-97 அன்று லண்டனில் காலமானார்.

இவர் S.J L. ஸ்ரனிஸ்லோஸ், ஆன் யூலியட், மேரி றீசா, பீற்றர் ஜெராட் (U S A.), மரிஸ்ரெல்லா, விக்ரர் இம்மனுவேல் (U S A ), ஜெயா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விமலா. றூத்திறா பஸ்ரியாம்பிள்ளை, டொறத்தி ஜீன், சறோஜினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19-3-97 இல் லண்டனில் நல்லடக்கம் செய்யப்பட்டது

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**செல்வி மேரி றீசா**

120, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (45916)

## நடராஜாகுருக்கள் கனகசபாபதி சர்மா
**(மூர்த்தி ஐயா)**

பொலிகண்டி கந்தவனக் கடவையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். நாவலர் வீதியை வதிவிடமாகக் கொண்டவரும் கிரிப்பிள்ளையார் கோயில் அர்ச்சகருமாகிய கனகசபாபதி சர்மா 19- 03- 97இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாகுருக்கள்– தர்மாம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும் வரதலட்சுமியின் அன்புக் கணவரும் வசந்தி, கௌரி, சாந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் நடராஜ சர்மா, கிருஷ்ணசர்மா, புவனேஸ்வரராஜசர்மா (ராஜன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20- 03- 97 இல் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
**தே புவனேஸ்வரராஜ சர்மா**
(மருமகன்)

120, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம். (45925)

## ந. ஜெகதீஸ்வரன் (மகேந்திரம்)

நவாலி அரசடியைச் சேர்ந்த நடேசு—வள்ளியம்மை தம்பதியினரின் மகன் ஜெகதீஸ்வரன் 17-3-97 அன்று மரணமானார்.

இவர் ஜெகதீஸ்வரி, விக்கினேஸ்வரன், வனராஜ் (சுவிஸ்), பாமினி, ஜெயகோபி (மாங்குளம்), பிரபாகரன் (கொழும்பு), சுரேசன், சுபேந்திரன் ஆகியோரின் சகோதரனும், தெய்வேந்திரம், ரேவதி, வத்சலா ஆகியோரின் மைத்துனரும், அகிலன், சயந்தினி, ரஜீதா, அனுசன் ஆகியோரின் மாமனும், அஜந்தனின் சிறிய தகப்பனும், துலக்சனாவின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18-3-97 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ந. விக்கினேஸ்வரன்**
(சகோதரர்)

நவாலி, அரசடிச்சந்தி,
மானிப்பாய். (45923)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ... நூலகம்

# கிழக்கு ஸயரின் லுபும்பாஷி நகரத்தைப் பிடிக்க கிளர்ச்சிப் படைகள் முன்னேறத் தொடங்கின

## வைரச் சுரங்கங்களைப் பாதுகாக்க அப்பகுதியில் அரச படைகள் குவிப்பு

கின்ஸாசா, மார்ச் 21

கிழக்கு ஸயரின் ஷாபா பிராந்தியத்தில் உள்ள லுபும்பாஷி (Lubumbashi) என்ற நகரத்தைக் கைப்பற்றப் போவதாக அறிவித்து கிளர்ச்சியாளர்கள் முன்னேறத் தொடங்கியதை அடுத்து — அந்த நகரில் இருந்து இராணுவ அதிகாரிகளும், வெளிநாட்டு தொண்டர் நிறுவன அதிகாரிகளும் தங்கள் குடும்பங்களுடன் வெளியேறிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கிசங்கானி நகரை அண்மையில் கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள் அங்கிருந்து ஷாபா பிராந்தியத்தை நோக்கி முன்னேறத் தொடங்கியுள்ளனர்.

லுபும்பாஷி நகரம் ஸயரின் இரண்டாவது பெரிய நகரமும் செம்பு விற்பனை மையமும் ஆகும்.

கிளர்ச்சிப் படைகளின் இந்த முன்னேற்றத்தை அடுத்து லுபும்பாஷி நகருக்கு அண்மையில் உள்ள வைரச் சுரங்கங்களைப் பாதுகாப்பதற்காக ஸயர் அரச படைகள் அங்கு விரைந்துள்ளன.

ஷாபா பிராந்தியம் இன்னும் சில தினங்களில் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும் என கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸயர் அதிபர் மொபுட்டு வின்கானக இல்லமும் இப்பகுதியிலேயே அமைந்துள்ளது. இங்குள்ள வைரச் சுரங்கங்கள் கிளர்ச்சியாளர்கள் வசமானால் அது அவர்களின் நிதிவளத்தைப் பெருக்கிவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுவரும் அதிபர் மொபுட்டு இவ்வாரம் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸயரில் விடுதலைக்காகப் போராடி வரும் ஏ.டி.எப்.எல் என்ற கிளர்ச்சிப் படையினர் கடந்த ஒக்டோபரில் தங்கள் போராட்டத்தை ஆரம்பித்த நாள் முதல் ஸயரின் பல நகரங்களை அடுத்தடுத்துக் கைப்பற்றி விட்டனர்.

கிளர்ச்சிக் குழுத் தலைவர் லோறன்ஸ் கபிலாவுடன் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த ஐ.நா. செயலாளர் கடந்த வாரம் எடுத்த முயற்சி தோல்வி கண்டது.

(ஐ-10)

# இத்தாலி முழுவதும் அவசர கால நிலை!

## அகதிகள் வருவதை அடுத்து

பிரின்டிசி மார்ச் 21

அல்பேனியாவில் இடம் பெறும் உள்நாட்டுக் கலகங்களில் இருந்து தப்பி பல்லாயிரக்கணக்கான அல்பேனிய அகதிகள் தெற்கு இத்தாலிப் பகுதிக்குள் சென்று குவிவதை அடுத்து இத்தாலிய அரசு நாடு முழுவதும் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

றோமில் அமைச்சரவைக் கூட்டத்தில் அடுத்து வரும் மூன்று மாத காலத்துக்கு தேசிய அவசர கால நிலையைப் பிரகடனஞ் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது.

மாபெரும் மனிதாபிமான நெருக்கடி நிலையைச் சமாளிக்க நிதியும், போக்குவரத்து வசதிகளும் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தெற்கு இத்தாலியில் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள அல்பேனியர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய வசதிகளை அளிக்கத் தமக்கு நிதி தேவைப்படுவதாக இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அல்பேனியாவில் நிலைமை சீரடையும் வரை அல்பேனிய அகதிகள் இத்தாலியில் தங்கியிருக்க வசதியாக அவர்களுக்குத் தற்காலிக வீஸா வழங்கவும் இத்தாலிய அரசு முடிவு செய்துள்ளது.

உண்மையான அகதிகளுடன் சேர்ந்து அல்பேனியச் சிறைகளில் இருந்து தப்பி வந்த சுமார் 250 அல்பேனியக் குற்றவாளிகளை மீண்டும் அல்பேனியாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ஜின்னாவாக கிறிஸ்தோபர் லீ! திரைப்படம் எழுப்பியுள்ள சர்ச்சை!!

பாகிஸ்தான் சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் பூர்த்தியடைகின்ற நிலையில் —

பாகிஸ்தானை உருவாக்கிய சிற்பி எனப் போற்றப்படும் முஹமது அலி ஜின்னாவின் வாழ்க்கை வரலாறு தொடர்பான சர்வதேசத் திரைப்படம் ஒன்று பாகிஸ்தானில் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

பிரிட்டன் மற்றும் பாகிஸ்தானிய நிதி உதவியுடன் தயாரிக்கப்படும் இத்திரைப்படத் தயாரிப்பு வேலைகள் கராச்சியில் ஆரம்பமாகியுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஜின்னாவின் பாத்திரத்தை இந்தப்படத்தில் சித்திரிப்பது பாகிஸ்தானில் சர்ச்சையை உருவாக்கும் விடயமாக மாறியுள்ளது.

படத்தில் ஜின்னாவின் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் பிரிட்டிஷ் நடிகர் கிறிஸ்தோபர் லீ (வயது 74) இந்தச் சர்ச்சையில் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ளார்.

''ட்ரெகுலா'' உட்பட திகில் படங்களில் தோன்றி நடித்த லீ இந்தப் படத்தில் ஜின்னாவின் பாத்திரத்தில் தோன்றுவது பொருத்தமற்றது என்று திரைப்பட ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

''திகில் படங்களில் பிரதான பாத்திரங்களில் தோன்றிய ஒருவரை தங்களின் தேசியத் தலைவர்களில் ஒருவராகப் பார்க்க பாகிஸ்தானியர்கள் விரும்பமாட்டார்கள்.''

''இத் திரைப்படத்தின் கதை அமைப்பு பக்கசார்பற்ற வரலாற்று ஆசிரியர்கள் எவராலும் பரிசீலிக்கப்படவில்லை. திரைக்கதை அமைப்பில் ஆட்சேபனைக்கு இடமாக ஒன்றும் இல்லை என்பதை பரிசீலிக்க குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.''

''அவ்வாறு செய்யப்படாவிட்டால் இத் திரைப்படம் சல்மான் ருஷ்டியின் புத்தகம் போல் ஆகிவிடும்.''

— இவ்வாறு தெரிவித்தார் பாகிஸ்தானியப் பத்திரிகையாளர் ஒருவர்.

''கிறிஸ்தோபர் லீ இப்பாத்திரத்தில் நடிப்பதால் ஜின்னா அவர்கள் அசல் இரத்தத்தை உறிஞ்சுபவராகச் சித்திரிக்கப்படுவார்'' — என்று ''த நியூஸ்'' என்ற பாகிஸ்தான் பத்திரிகை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் இத் திரைப்படம் குறித்த சர்ச்சையில் அரசியலும் கலந்துள்ளது. அரசு வழங்கிய நிதியும் ஒத்துழைப்பும் இந்த விவகாரத்தை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

குவைத் நிறுவனம் ஒன்று இத்திரைப்படத்தைத் தயாரிக்கவுள்ளது. இதனால் எழுந்துள்ள சர்ச்சை பாகிஸ்தானில் அரசியல் ரீதியான நெருக்கடிக்கு வழிகோலிவிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ)

# அரசமைக்க பி. ஜே. பி முயற்சி!

புதுடில்லி, மார்ச் 21

ஜனாதிபதி ஆட்சியின் கீழ் உள்ள இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் ஆட்சி அமைப்பது குறித்து பாரதிய ஜனதாக் கட்சிக்கும் பகுஜன் சமாஜ் கட்சிக்குமிடையே புதுவிதமான ஒப்பந்தம் ஒன்று ஏற்பாடாகியுள்ளது.

இதன்படி முதல் ஆறு மாதங்களுக்கு பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்தவர் முதலமைச்சராகப் பதவி வகிப்பார்.

அடுத்த ஆறு மாதங்களுக்கு பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர் முதலமைச்சராக இருப்பார். இப்படியாக ஆறுமாதங்களுக்கு ஒருமுறை முதலமைச்சர்கள் மாறுவார்கள்.

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி, பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் கான்ஷிராம் ஆகியோரிடையே இடம் பெற்ற உயர்மட்டப் பேச்சுவார்த்தையை அடுத்து இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உத்தர பிரதேச சட்டசபையில் மொத்த உறுப்பினர்கள் தொகை 425. இதில் ஆட்சி அமைக்கத் தேவையானவை 223 இடங்கள்.

பாரதிய ஜனதாவின் தற்போதைய உறுப்பினர் தொகை 177 ஆகும். பகுஜன் சமாஜ் கட்சி மொத்த உறுப்பினர்கள் தொகை 67 ஆகும்.

இந்த எண்ணிக்கை விவரங்களுடன் இரு கட்சித் தலைவர்களும் கடந்த புதனன்று ஆளுநர் றொமேஸ் பண்டாரியைச் சந்தித்து ஆட்சி அமைக்க தங்கள் கூட்டணியை அழைக்கும்படி கோரிக்கை விடுத்தனர்.

(ஐ-10)

# உலக அரங்கில்

## ஓவியங்களை சொந்தமாக்க தடை

மொஸ்கோ, மார்ச் 21

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் ரஷ்யாவின் செம்படைகளால் வெளிநாடுகளில் கொள்ளையிடப்பட்டு ரஷ்யாவுக்கு கொண்டு செல்லப்பட்ட விலை மதிப்பற்ற ஓவியங்களை —

ரஷ்யாவுக்குச் சொந்தமானவை என்று பிரகடனஞ் செய்யும் சட்டத்தை ரஷ்ய நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் நிறைவேற்றியுள்ளன. ஆனால் அதிபர் யெல்ட்சின் தனது தடுப்பு வாக்குரிமையைப் பயன்படுத்தி அந்தக் கூட்டத்தை தடை செய்துவிட்டார்.

(ஐ)

## அல்ஜீரியாவில் தொடர்ந்து குண்டு வெடிப்பு

அல்ஜியர்ஸ், மார்ச் 21

அல்ஜீரியாவில் கடந்த திங்களன்று வாகனக்குண்டுஒன்று வெடித்ததில் 4 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் படுகாயமடைந்தனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து மேலும் இரண்டு குண்டுகள் வெடித்ததாகவும் அதில் குறைந்தது ஏழு பேராவது கொல்லப்பட்டனர் எனவும் கோபா பகுதி மக்கள் தொலைபேசியில் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு மாதங்களில் அல்ஜீரியாவில் சுமார் 300 பேர் இத்தகைய குண்டு வெடிப்புகளுக்குப் பலியாகியுள்ளனர்.

முஸ்லிம் தீவிரவாதிகளே இத் தகைய வன்முறைகளை மேற் கொள்வதாக அரசு குற்றம் சுமத்தி வருகிறது.

(ஐ-10)

## சி.ஐ. ஏக்கு புதிய பணிப்பாளர்

வாஷிங்டன், மார்ச் 21

அனைவரும் எதிர்பார்த்தவாறே ஜனாதிபதி பில் கிளின்டன் அமெரிக்க உளவு நிறுவனத்தின் (சி. ஐ. ஏ.) பதில் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஜோர்ஜ் பனிற்றை நிரந்தரப் பணிப்பாளராக நியமித்துள்ளார்.

(ஐ-10)

# பலஸ்தீனியர்கள் கூடி அகிம்சை முறையில் எதிர்ப்புத் தெரிவிப்பு

ஜெருஸலேம், மார்ச் 21

கிழக்கு ஜெருஸலேமில் சர்ச்சைக்குரிய யூதக் குடியிருப்பு கட்டுமானப் பணிகள் பலத்த பாதுகாப்பின் மத்தியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கட்டுமானப் பணி நடைபெறும் வலயத்துக்கு வெளியே தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக பல நூற்றுக்கணக்கான பலஸ்தீனியர்கள் தரையில் அமர்ந்திருந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

சாத்வீக முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு மக்களை பலஸ்தீனத் தலைவர்கள் கேட்டுள்ளனர்.

இஸ்ரேலுக்கு எதிராகத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை புதிதாக நடத்த யசீர் அரபாத் பச்சைக்கொடி காட்டி விட்டார் என்று பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு குற்றஞ்சாட்டியுள்ளார்.

(ஐ)

# ஏவுகணை எதிர்ப்புத் திட்டம்

புதுடில்லி, மார்ச் 21

திடீரென நடத்தப்படும் எதிரிகளின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு விரிவான பாரிய பாதுகாப்புத் திட்டம் ஒன்று அமைக்கப்படும் என்று இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் [illegible] ஏவுகணை எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்பை ஒத்ததாக இது விளங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ★ யூதக் குடியிருப்பு

## கட்டுமானத்தைத் தடுக்க மனு; உயர் நீதிமன்றம் நிராகரிப்பு!

ஜெருஸலேம், மார்ச் 21

கிழக்கு ஜெருஸலேமில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் யூதக் குடியிருப்புகளை அமைக்கும் இஸ்ரேலின் திட்டத்தை நிறுத்தக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளை இஸ்ரேல் உயர் நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

அரேபியர்கள் சிலரும், அமைதியை விரும்பும் இஸ்ரேலியர்களும், இஸ்ரேலிய எதிர்க்கட்சியினரும் இணைந்து இந்த வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான மற்றொரு மேன்முறையீடு ஒன்றை உயர் நீதிமன்றம் தொடர்ந்து பரிசீலித்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

(ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னியில் இருந்து வந்தவர்களுக்கு குருநகரில் சுகாதார பரிசோதனை

## பலருக்கு சொறி, சிரங்கு, வயிற்றுளைவு

குருநகர், மார்ச் 21

வன்னியில் இருந்து யாழ். குடாக்கடல் ஊடாக வள்ளங்களில் கடந்த திங்கட்கிழமை குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்த குடும்பங்கள் அன்று மாலை தொடக்கம் யாழ். சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் இராணுவத்தினரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளன. மறுநாள் செவ்வாய்க்கிழமை தொடக்கம் குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்கு தமது இருப்பிடங்களுக்கு சென்று திரும்பி வர அவர்கள் அனுமதிக்கப் பட்டனர்.

இக்குடும்பங்களின் சுகாதார விடயங்களைக் கவனிப்பதற்கு குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. மயில்வாகனம் தலைமையில் யாழ் மாநகர சுகாதாரப் பகுதியினர் நாளாந்தம் இம்முகாமிற்கு சென்று அகதிகளைப் பரிசோதித்து வருகிறார்கள்.

பலாலியில் இருந்து வந்த இராணுவ வைத்தியக்குழு ஒன்றும் இவர்களைப் பரிசோதித்து நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சையளித்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் சொறி, சிரங்கு, வயிற்றுளைவு போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இவ் அகதிகளில் 90 வீதமானோர் வன்னியில் தங்கியிருந்த காலப் பகுதியில் மலேரியாநோயினால் பீடிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

156 குடும்பங்களைச் சேர்ந்த 557 பேர் இம் முகாமில் தங்கியுள்ளார்கள். இவர்களில் 10 கர்ப்பிணித் தாய்மாரும் அடங்குவர்.

(ஐ-51)

## கடைகள், வீடுகள் கொழும்பில் தீக்கிரை

கொழும்பு, மார்ச் 21

கொழும்பு கறுவாக் காட்டில் மாநகர சபைக்கு அருகிலுள்ள 3 கடைகளும் மருதானை பஞ்சிகாவத்தையிலுள்ள இரு வீடுகளும் கடந்த செவ்வாயன்று ஏற்பட்ட தீ விபத்துக்களால் எரிந்து சாம்பலாகின.

கடந்த செவ்வாய் காலை கொழும்பு மாநகர சபைக்கு அருகில் யூனியன் பிளேசில் சலாக்கா விற்பனை நிலையத்துக்கு அருகிலுள்ள சாராயத்தவறணை, தேயிலை விற்பனை நிலையம், சாப்பாட்டுக் கடை ஆகியன எரிந்து சாம்பலாகின.

செவ்வாய் மாலை பஞ்சிகாவத்தையிலுள்ள இரு வீடுகள் எரிந்து சாம்பலாகின.

இந்த இரு தீ விபத்துக்களுக்கும் மின்சார ஒழுக்கே காரணம் எனக் கூறப்பட்ட போதிலும் விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-10)

## விழா முற்பணம் கிடைக்கும்

குருநகர், மார்ச் 21

யாழ். மாவட்டத்தில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு இம்மாதச் சம்பளத்துடன் விழா முற்பணப் பணம் ரூபா ஆயிரத்து ஐநூறும் சேர்த்து வழங்கப்படும். இதற்கான பணிப்பு கல்விக் கோட்டங்களில் கடமையாற்றும் சகலநிதி உதவியாளர்களுக்கும் விடுக்கப்பட்டிருப்பதாக யாழ். கல்வி வலயம் - 1 கணக்குக் கிளை தெரிவித்துள்ளது.

(ஐ-51)

## விவசாயிகள் ஒய்வூதியம் திங்களன்று

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாய ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் மார்ச் மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் திங்கட்கிழமை கமத்தொழில் காப்புறுதிச்சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

விவசாயிகள் தவறாது தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரச ஊழியருக்கு விசேட அ. அட்டை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பணி புரியும் சகல அரச ஊழியர்களுக்கும் பாதுகாப்புப் படையினரால் விசேட அடையாள அட்டையொன்று வழங்கப்படவுள்ளது.

இதற்கு ஊழியர்களின் சகல விவரங்களும் அடங்கிய பட்டியல்களை அனுப்பி வைக்குமாறு சகல திணைக்களத் தலைவர்களும் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

★ கீழ்ப்படிய மறுத்த

## சிப்பாயை சுட்டுக் கொன்றபின் படை அதிகாரி தற்கொலை!

### வரணியில் சனியன்று சம்பவம்

தென்மராட்சி, மார்ச் 21

தனது கட்டளையை ஏற்க மறுத்த சிப்பாயை கனிஷ்ட படை அதிகாரி ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதுடன் அதே துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை வரணி சுட்டிபுரம் அம்மன் கோயில் பகுதி முகாமில் இடம்பெற்றது.

லான்ட்ஸ் கோப்ரல் ரி. பெர்ணான்டோ என்பவரை படை சார்ஜன்ட் எஸ்.வி வசந்தகுமார என்பவரே சுட்டுக் கொன்ற பின் தானும் தற்கொலை செய்து கொண்டார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் விசாரணை நடத்தி சடலங்களை உறவினர் முன்னிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை செய்யுமாறு சாவகச்சேரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கொழும்பு பெரியாஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனை கிடைக்கும் வரை தீர்ப்பு வழங்குவதை அவர் ஒத்தி வைத்தார்.

மரண விசாரணையின் போது சாவகச்சேரி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒஸ்ரின் சாட்சியை நெறிப்படுத்தினார். (ஐ-117)

## மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம். மார்ச் 21

ஊரெழு கணேச வித்தியாசாலை, ஊரெழு சீ.சீ த.க. பாடசாலையும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை உள்ளக மைதானத்தில் அதிபர்கள் இரா. சிவஞானசுந்தரம், இரா. குலசிங்கம் ஆகியோர் தலைமையில் நடைபெறும். (ஐ)

★ ★ ★

யாழ். சன்மார்க்க மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் து. நடராசலிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வலயம்-1 கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

நாவற்குழி அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணி முதல் பதில் அதிபர் எஸ். பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும்.

சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த எஸ். சத்தியநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-100)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பொன். சத்தியமூர்த்தி

## கண்ணருவி அஞ்சலி



அமரர்

பொன். சத்தியமூர்த்தி

மண்ணின்பணிக்கு: 23-6-1949
விண்ணின்பணிக்கு: 15-3-1995

பொது முகாமையாளர் வடமராட்சி
பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க
கொத்தணி யாழ். மாவட்ட சி. க. கூ. சங்க
சமாச நெறியாளர்,
யாழ். மாவட்ட சித்த வைத்திய கூட்டுறவுச் சங்க
இயக்குநர்.

சத்தியம், நிலையான தென்றிருந்தோமே
சற்றுமெதிர்பாராதவேளை, இடிவிழுந்ததே காதில்.
போய் வருகிறேன் என்று சொல்லிப் போனீர்கள்,
மீண்டுவராப் போக்காகி விட்டதே நிலைமை
உருண்டோடிய ஆண்டுகள் இரண்டு
இருண்ட நெஞ்சங்களை ஆற்றவில்லையே?
சாந்திபெற அஞ்சலிக்கிறோம்!

மனைவி, மகன், மாமி,
பெற்றோர் குடும்பத்தினர்.

'நிழல்வாடி'
கரவெட்டி.

படிக்கின்ற வேளை தொடங்கியது நட்பு; அது தொடர்ந்தது.
பரிவறியா நட்பு காலைமுதல் மாலைவரை. காணாத நேரமில்லை
நிகழ்ந்தது விபத்தென்றார்கள், எம்வாழ்வுக்கு நேர்ந்த விபத்தானதே?
கண்முன்னே நிழற்படத்திற் காணாத வேளையில்லையே
உயிருக்கு நினைக்கத்தெரியுமானால், என்றென்றும் நினைவிருக்கும்.
சாந்திபெற தேவனைப் பணிகின்றோம்.

அன்ரன் செல்வராசா குடும்பத்தினர்,
நண்பர்கள், ஊழியர்கள்.

மொடேர்ன் ஸ்ரோர்ஸ்
நெல்லியடி, கரவெட்டி.

சத்தியம் களஞ்சியம்
சாமியன் அரசடி, கரவெட்டி.

(சி/348)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பொதுநூலகம்.

# காச நோய்ச் சிகிச்சையில் புதிய முறை கண்டுபிடிப்பு

காசநோய் சிகிச்சையில் ஆய்வாளர்கள் சிறந்த முறை ஒன்றைக் கண்டு பிடித்திருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் நேற்று அறிவித்தது. இதன் மூலம் உலகம் எங்குமுள்ள இலட்சக் கணக்கான மக்கள் காப்பாற்றப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பேர்லின் நகரில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றிலே இதுபற்றி முதலில் அறிவிக்கப்பட்டது. ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார ஸ்தாபன தலைமையகம் இந்தக் கண்டுபிடிப்புப் பற்றி ஊர்ஜிதம் செய்துள்ளது.

டி. யூ ரி. எஸ். என சுருக்கமாக அழைக்கப்படும் நேரடி கண்காணிப்பில் அளிக்கப்படும் சிகிச்சையின் குறைந்த காலப் பயிற்சி என்ற புதிய சிகிச்சை முறை ஒன்றை உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்படுத்தியுள்ளது.

இது பல மருந்துகள் கொண்ட சிகிச்சை ஆகும். மேலும் இதன்மூலம் நோயாளிகள் பாதுகாப்பாகக் கண்காணிக்கப்படுவார்கள். இந்த சிகிச்சையின் மூலம் எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்பட உள்ளதால் இந்த 10 ஆண்டு காலத்தில் மிகப் பெரிய சுகாதார முன்னேற்றம் இதுவே ஆகும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமை இயக்குநர் கிரேஸி நாகசீமா தெரிவித்துள்ளார்.

குறுகிய கால நேரடிக் கண்காணிப்பு சிகிச்சை எனப்படும் இந்த சிகிச்சை முறை மூலம் காசநோய் தொற்றுவது பெருமளவில் குறைக்கப்படும் 'டொற்ஸ்' எனப்படும் இந்த சிகிச்சை முறை மூலம் சகல காச நோயாளிகளும் பூரணமாக குணப்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## படுவான் கரையில் நெற்கதிர்கள் அறுவடை இன்றி அழிகின்றன

### விவசாயிகள் செல்லத் தடை

கொழும்பு, மார்ச் 21

மட்டக்களப்பு மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக விளங்குகின்ற படுவான்கரை பிரதேசம் தற்போது சூனியப்பிரதேசமாக மாறியுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி வவுணதீவு முகாம் தாக்கப்பட்ட பின்னர் பொது மக்கள் அங்கு செல்வதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது.

ஏற்கனவே அறுவடையைப் பூர்த்தி செய்யாத விவசாயிகளும் எதிர்வரும் சிறுபோக நெற்செய்கைக்குத் தயாராகும் விவசாயிகளும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு எழுதிய கடிதம் ஒன்றில் மேற்கண்ட விடயங்களைப் பிரஸ்தாபித்துள்ளார். பெரும்போக அறுவடை மேற்கொள்ள வயல்களுக்கு செல்லவும், விவசாயிகள் அனுமதிக்கப்படாததால் விளைந்த வேளாண்மைகள் அழிகின்றன. எனவே பாதுகாப்பை வழங்கி விவசாயிகள் அறுவடையைப் பூர்த்தி செய்ய அனுமதி வழங்கப்படுவதோடு, சிறுபோக வேலைகளை ஆரம்பிக்க இடமளிக்க வேண்டும் என்றும்—

ோக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டதால் மண்முனை மேற்கு பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்ச நிலைமை போக்க அங்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல விசேட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (இ-5)

## பாடசாலையில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம். மார்ச் 21

பாலர் பாடசாலையில் சாத்தி வைக்கப்பட்டிருந்த நிலை ஒன்று சரிந்து விழுந்ததில் அப் பாடசாலைச் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

குருநகர்ப் பகுதி பாலர் பாடசாலையொன்றில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில், குருநகரைச் சேர்ந்த சந்திரன் இளமாறன் என்ற நான்கு வயதுச் சிறுவனே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## தவக்காலச் சிந்தனை

### (38 ஆம் நாள் — வெள்ளி)

''தந்தையின் ஆற்றலால் மேலான செயல்கள் பல உங்களுக்குச் செய்து காட்டியுள்ளேன். அவற்றில் எச்செயலுக்காக கல்லால் எறியப் போகின்றீர்கள்'' (அரு. 10:32). இது இயேசுவின் கேள்வி. யூதர்களுக்கு மட்டுமல்ல, எமக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

உமது நண்பனைச் சொல்லும் உம்மை யாரென்று கூறுவோம் என்பார்கள். அது நாம் தேர்ந்து கொண்ட, கடைப்பிடிக்கின்ற தோழமையின் நிலைப்பாட்டை தெளிவாக்கும், இயேசுவும் தந்தையாம் இறைவனின் ஆற்றலால் மேலான செயல்கள் பல புரிந்தார். தனியராக நற்செயல் புரிபவர்களைப் பெரிய மனிதர்கள் எனப்படும் சமுதாயம் இல்லாமல் செய்யுமளவு துணியவில்லையா? எதுவரினும் நாம் நற்செயல் புரிவதில் தளரக் கூடாது. சிலுவை தான் இதற்குப் பரிசாகும், தூக்கத் தயாரா? பயணம் தொடரத் தயாரா? மரணம் தான், ஆனால் உயிர்ப்பு நிச்சயம்!

—அ. பீற்றர்ராஜன்

## நவீல்ட் மாணவருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 21

கைதடி நவீல்ட் பாடசாலைக்கு புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன, 5 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட செவிப்புலன், விழிப்புலன் இழந்த சிறுவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பப் படிவங்களை பாடசாலையில் பெற்று ஏப்ரல் 23 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது, (ஐ-4)

## சிவப்பத பேறு எய்திய பிரார்த்தனை

வல்வெட்டி, வேவில் பிள்ளையார் ஆலய பிரதம குரு

### சிவஸ்ரீ சு. வேதாரணியக்குருக்கள்

சிவப்பேறு அடைந்ததையொட்டி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக வேதவனப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

சு. முத்துக்குமாரசாமிக்குருக்கள்
சிவாச்சாரிய பீடாதிபதி,
கணேசபீடம்,
திருகோணமலை.

இலங்கை சைவக் குருமார்
அச்சகர் பேரவை,
'சிவகிரி'
கோப்பாய்.

(45913)

## முதலாம் தவணை மாதிரிப் பரீட்சைகள்

(எல்லாப் பாடங்களும்)

- ஆண்டு 3, 4, 5 - 22 — 03 - 97 சனி
- இப்பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் 23 - 03 - 97 முதல் எம்மிடம் பெறலாம்.
- ஆண்டு 6, 7, 8, — 22. 23 - 03 - 97
- இப் பரீட்சை வினாத்தாள்கள் – விடைகளுடன் 23 - 03 - 97 காலை 11.00 முதல் பெறலாம்.
- ஆண்டு 9, 10, G. C. E. O/L 28, 29, 30 - 03 - 97 வெள்ளி, சனி, ஞாயிறு
- இப் பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் 30 - 03 - 97 1.30 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைப் பகுதி **BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

(45910)

உ
ஸ்ரீ கணேசாயநமக

## பஞ்ச குண்ட நவோத்தர சகஸ்ர சங்காபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் தாத்ரு வருஷம் பங்குனி உத்தரமும் பூரணையும் கூடிய நன்னாளில் 23 — 03 — 97 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு

**உடுப்பிட்டி வல்லைவாழி சித்தி விநாயகருக்கு**

மேற்படி வைபவம் கோலாகலமாக நடத்தி வைக்கப்படும்.

★ சங்காபிஷேக பிரதம குருக்கள்:
கிரியா பூசனம்
**சிவஸ்ரீ ம. திருஞானசம்பந்தக் குருக்கள்**
(வியாபாரி மூலை இன்பர்சிட்டி சித்தி விநாயகர் ஆலயம்)

★ சர்வ போதகாசிரியர்:
**சிவஸ்ரீ பா. பத்மநாதக் குருக்கள்**
(கிரியாரத்தினம் மஹாமாரி அம்பாள் ஆலயம்-கெருடாவில் தொண்டமானாறு)

★ சாதகாசிரியர்:
**சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக் குருக்கள்**
(சாதகஞான பானு - கதிரேசன் ஆலயம் - அநுராதபுரம்)

ஆகியோருடன் மற்றும் பல அனுபூதி நிறைந்த சிவாச்சாரியார்கள் திறம்பட நடத்தி வைப்பார்கள்.

சிவஸ்ரீ தி. ஜெயச்சந்திரக் குருக்களும்,
(ஆலயப் பிரதம குரு)
விநாயகர் அடியார்களும்

வல்லைவாழி, உடுப்பிட்டி. (45890)

## விற்பனைக்கு

சகல இன ரெலிவிஷன்களின் fly Back, IC, ரான்சிஸ்ரர், Video Head, Belt, மற்றும் உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம் கொழும்பில் இருந்து ஓடர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**
Stanly Road, Jaffna
(றெயில்வே கடவை அருகாமை) (45921)

## A/L 97 98

கிரயக் கணக்கியல்
ஆரம்பம்: 22-03-1997
பிரிவு I : 2 - 3 p.m.
பிரிவு II : 4 - 5 p.m.
ஆசிரியர்:
திரு. நித்தியானந்தராஜா
B.B.A.
C.C.A.
யாழ்ப்பாணம்.
(45914)

உ
சிவமயம்

## இந்துசமயப் பேரவை யாழ்ப்பாணம்

## "இந்து தர்மம்" - மலர் - 12

(மாதாந்த ஆத்மீக சஞ்சிகை)

## வெளியீட்டு விழா

காலம்: இன்று 21 - 03 - 1997 வெள்ளி முற்பகல் 10-00 மணி
இடம்: சிவகாமி அம்மன் கோயில், இணுவில்.
தலைவர்: அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்

### நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்
டாக்டர்: க. பாலசுப்பிரமணியம்

1. தேவாரம்
2. வரவேற்புரை: சமாதான நீதிபதி பெ. கனகசபாபதி (தலைவர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம்)
3. தலைமையுரை
4. வெளியீட்டுரை: கலாநிதி சபா. ஜெயராசா (யாழ். பல்கலைக்கழகம்)
5. சிறப்புரை: திரு ஆ மகாலிங்கம் (உப தலைவர், இந்து சமயப் பேரவை)
   திரு. ஆறு. திருமுருகன் B. A (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)
6. முதற்பிரதி வழங்கல்:
   பெறுவோர்:
   திரு. சுப்பையா இராமச்சந்திரன் (நாதன் பிறதர்ஸ், சுன்னாகம்)
   திரு. பொ. நடராசா (அண்ணா கோப்பி இணுவில்)
   திரு. து. சிவராசா (லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)
   திரு. செல்லையா சிவலிங்கம் (சிற்றி காமன்ஸ், திருநெல்வேலி)
   திரு. செல்லையா வாமதேவன் (சிற்றி காமன்ஸ், இணுவில்)
   திரு. சி. பாலச்சந்திரன் (மல்ரி ஒயில், இணுவில்)
   திரு. கணேஸ் (கணேசன் றேடிங் கொம்பனி)
   திரு. செ. இலகுநாதன் (கிராம அபிவிருத்திச் சங்கம், இணுவில்)
   திரு. எஸ். ஜெகநாதன் (கமக்காரர் மாளிகை, திருநெல்வேலி)
   திரு. எஸ். கந்தசாமி (கலா அழகு மாடம், யாழ்ப்பாணம்)
   திரு. க. சின்னராசா (வர்த்தகர், இணுவில்)
   திரு. கே. எஸ். ஆனந்தன் B. A.
7. நன்றியுரை
8. தேவாரம்

அனைத்து இந்துக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நூல் வெளியீட்டு உதவி விழா ஏற்பாடு:
இணுவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

சி. சக்திகிரீவன்
செயலாளர்.

சீ, விநாசித்தம்பி
தலைவர்

இந்து சமயப்பேரவை - யாழ்ப்பாணம்.

((சி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சுந்தையா செல்லம்மா ஆகிய எனது 356531906 V இலக்க தேசிய அடையாள அட்டை பேர்சுடன் புன்னாலைக்கட்டுவன் செல்லும் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொ. மயில்வாகனம் 284, பலாலி வீதி, கந்தர்மடம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (45894)

அந்தோனிப்பிள்ளை கென்றி என்பவருடைய தேசிய அடையாள அட்டை 482302700 V பிரதான வீதிக்கும். கோயிலுக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 40 கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (45898)

அளவெட்டியைச் சேர்ந்த கனகரத்தினம் கனகம்மா ஆகிய எனது அடையாள அட்டை இல. 328201186 V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 111, பிரதான வீதியிலுள்ள யாழ். மாவட்ட விவசாய சமாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (45896)

அருணாசலம் சசிரேகா என்பவரது இல. 617322579 V தேசிய அடையாள அட்டை பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ராசிபட்டுச்சோலை, நவீனசந்தை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (45905)

### ஆங்கிலப் பரீட்சைகள்

O/L 97 ஆண்டு 9, 10. உட்பட முதலாம் தவணைப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறடைய. Spoken English, கணிதம் இருமாதங்களிலும் அனுபவமுள்ள London Inter ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி திருநெல்வேலி. (9413)

### பிரத்தியேக வகுப்பு

ஆங்கில வகுப்புகள் 22 - 3 - 97 சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகின்றன. திருமதி எஸ். கதிர்காமர், 31, சுவாட்ஸ் லேன், சுண்டுக்குளி. (45895)

### ஆலோசனை வழங்கல்

சுய தொழில்களை ஆரம்பிக்க உமது திறமைக்கேற்ப உற்பத்திப் பொருள்கள் தெரிவு கடன் பெறுவதற்கு திட்டம் மொழிவு அறிக்கை, மூலப் பொருள்கள், இயந்திரம், தொழில் நுட்பம், சந்தைப்படுத்தல் எமது பங்களிப்பு. கு. பத்மநாதன் M.B.I M. (UK), Management Consultant 76/2, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். (9414)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி (புறோயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 154, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம். குறிப்பு; காலை 8.30 மணிவரை இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். (9409)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் கதைக்க, வாசிக்க, எழுத பயிற்சி கொடுக்கப்படும். ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி இல. 426 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (வண்ணை சிவன் சந்தி). (45900)

### ஓடு தேவை

எமக்கு மூவாயிரம் ஓடுகள் தேவை. தரகர் இல்லாது நேரடியாகத் தொடர்பு கொள்க: துர்க்காதேவி, தேவஸ்தானம், சாவகச்சேரி. (45906)

## அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர்
## திருக்குறள் புதிர்ப் பரிசுப்போட்டி 1997 முடிவுகள்

**(மொத்தப் பரிசு ரூபா பத்தாயிரம்)**

ரூபா 1000 விதம் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்

1. செல்வன் வை. ஷயந்தன் — C/o செ. வைரவநாதன் மீசாலை கிழக்கு.
2. வை. இராமேஸ்வரன் — குரும்பைகட்டி வைரவர் கோயிலடி புலோலி தெற்கு.
3. செல்வி வி. கோமகள் — அரசடி லேன், நவாலி தெற்கு.
4. இ. தேவமனோகரன் — தொல்புரம், சுழிபுரம்.
5. சபாபதி வடிவேலு — 52, பத்திரகாளி லேன், வண்ணார்பண்ணை.
6. இ. போபிராஜ் — பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
7. செல்வி சா. இரஞ்சினி — மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
8. சுபனா திருமகன் — 532/2, காலி வீதி, கொழும்பு - 3.
9. திருமதி கி. கிருசாம்பாள் — தம்பர் லேன், மானிப்பாய்.
10. கா. பீதாம்பரம் — அரியாலை, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியவர்கள் தம்மை அத்தாட்சிப்படுத்தும் ஆவணங்களுடன் வந்து பெற்றுக் கொள்ளவும்.

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்.**
41, கண்டி வீதி,
கைதடி. (45903)

# மணவாளக் கோலம்

(கும்பாபிஷேக தினம்)

**கொக்குவில் நந்தாவில்**

## கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

**காலம்: 21 - 03 - 97 வெள்ளிக்கிழமை இன்று**

காலை 7-30 மணிக்கு அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும். மாலை 3-00 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து நவசக்தி அர்ச்சனை நடைபெற்று, அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளும் காட்சியை கண்டு தங்கள் இஸ்டசித்திகளை பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம். விசேஷ மேளக்கச்சேரிகளும் இடம் பெறும்.

**ஆலய பரிபாலன சபை.**

(9412)

கைதடி - சிவசக்தி களஞ்சியம்

## வெள்ளிவிழாவை முன்னிட்டு சிவசக்தி அறிவொளி புத்தக நிலையம்

## ★ திறப்பு விழா ★

**காலம்:** 23-3-97 ஞாயிற்றுக்கிழமை காலை 9.32 மணி
**இடம்:** கைதடிச் சந்தி

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆறுமுகம் கந்தையா J.P.**

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்,
இல. 41, கண்டி வீதி, கைதடி. [45902]

# கண்ணீர் அஞ்சலி

யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலய
விஞ்ஞான ஆசிரியை

திருமதி ஆர். ஜெயராஜாவின் பாசமிகு தந்தையார்

## அமரர் சின்னத்துரை இராசரத்தினம்

அவர்களின் மறைவையிட்டு நாம் பெரிதும் கவலையடைகின்றோம். குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள்
**யா/ வண்ணை நாவலர் ம. வி.**

(45912)

# நினைவலைகள்

| 15 ஆம் ஆண்டு | 6 ஆம் ஆண்டு |
|---|---|
|  |  |
| அமரர் **பொ. கணபதிப்பிள்ளை** (நடுவில்) சமாதான நீதிவானும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும். உடுப்பிட்டி | திருமதி **சரோஜினி ஞானபண்டிதன்** (சரோ) சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும் உடுப்பிட்டி |
| மண்ணில்: 15 - 09 - 1912 விண்ணில்: 14 - 03 - 1982 | அன்னை மடியில்: 10 - 02 - 1956 ஆண்டவன் அடியில்: 28 - 03 - 1991 |
| திதி: 28-03-1997 (வெள்ளி) | திதி: 21-03-1997 (வெள்ளி) |

ஆறிடுமோ உங்கள் நினைவலைகள்
ஆண்டுகள் பல சென்றிடினும்.
பாரினில் வந்துதித்து சட்டத்தரணியானாய்!
பாதியில் எம்மை பரிதவிக்க விட்டு தந்தையிடம் சென்றதேனோ?
உங்கள் எழிலுருவம் மறைந்தாலும்
எம் நினைவுகளில் என்றும் வாழ்வீர்கள்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அன்பு சகோதரர்கள்,
மைத்துனர், மருமக்கள்,
மைத்துனிகள், பெறாமக்கள்.

(45838)

# 90 ஆவது நாள் நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 14 — 06 — 1960 | 21 — 12 — 1996 |

## கதிரவேலு கந்தசாமி

வினை வழியே விதிவரும்
உறவு வழியே பிரிவுவரும்
உணர்வு வழியே உரிமை வரும்
உதிர்ந்த வழியே சோகம் வரும்
சோகத்தின் வழியே கண்ணீர் வரும்
கண்ணீர் வற்றவில்லை காலம் வாடிப்போகிறது
காலமெல்லாம் உனக்காக கண்ணீர்
வடிக்கின்றோம்.

ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
அண்ணன், மனைவி, பிள்ளைகள்,
சகோதரிகள் குடும்பத்தினர்.

தகவல்:-
க. பொன்னம்பலம். (சகோதரன்)
ப. நோ. கூ. சங்கம்.
சாவகச்சேரி. (9411)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் யாழ்ப்பாணம்

# உதயன்

## தேர்தல் களம்

தென்னிலங்கையின் பதினேழு மாவட்டங்களில் உள்ள 238 உள்ளூராட்சி சபைகளுக்குப் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. பன்னிரண்டு மாநகரசபைகளும், 31 நகர சபைகளும் அவற்றில் அடங்கும்.

வழமையில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் உள் மட்டத்தில், வேட்பாளர்களின் தனிப்பட்ட செல்வாக்குக்கு (பணத்துக்கும் போத்தலுக்கும், சாப்பாட்டுக்கும்) வாக்கு என்ற நிலைக்கே மட்டுப்படுத்தப்படுவதுண்டு.

ஆனால் இந்த முறை உள்ளூராட்சித் தேர்தல் ஒரு பொதுத் தேர்தலைப் போன்று பெரிய பரிமாணம் பெற்றுள்ளது தேசிய மட்டத்தில் உள்ள பன்னிரண்டு அரசியல் கட்சிகளும் களத்தில் குதித்துள்ளன.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடங்கள் ஆகின்றன. அதன் மதிப்பும், அதற்குள்ள மக்கள் ஆதரவும் வீழ்ச்சி கண்டு வருவதாக வெளியே தென்பட்டது.

அந்தச் சந்தேகத்தை நீக்கி, மக்களில் பெரும்பாலானோர் அரசின் பக்கம் தான் நிற்கிறார்கள் என்று வெளியே காட்டவேண்டிய தேவை ஆளுங் கட்சிக்கு உண்டானது.

உள்ளூராட்சித் தேர்தலில் வென்றால், அந்தக்கையோடு பொதுத் தேர்தலை வைத்து அதிக நாடாளுமன்ற பலத்தை அடையலாம் என்றும் அரசு கருதியது.

ஆளுங்கட்சிக்கு — அரசுக்கு — ஆதரவு குறைகிறது என்ற வெளித்தோற்றம் உண்மைதானா, மக்கள் எங்கே நிற்கிறார்கள் என்று நாடி பிடித்துப் பார்க்க விரும்பியது பிரதான எதிர்க் கட்சியான ஐ. தே. க.

இவற்றின் விளைவே இன்றைய தேர்தல்.

ஆனால் இன்றைய தேர்தல் அமைதியாக நடைபெறுமா, மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியுமா என்ற அளவுக்குச் சந்தேகம் நிலவுகிறது. தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு உதவுங்கள் என்று ஜனாதிபதியும், பிரதமரும் வேண்டுகோள் விடும் அளவுக்கு தேர்தல் வன்செயல்கள் தலைதூக்கியுள்ளன.

பிரதான அரசியல் கட்சிகளான பொது மக்கள் ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் வன்செயல்களில் ஈடுபட்டதாகப் புகார்கள் செய்யப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் வேட்பாளர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்படும் அளவுக்குத் துப்பாக்கிக் கலாசாரம் விரவியுள்ளது. வேட்டா, 'வோட்டா' என்ற பயங்கரம் நிலவுகிறது.

வாக்காளர் அட்டைகளை அபகரிக்கும் வன்செயல் உண்மையான நியாயமான தேர்தலுக்கு மற்றொரு சவாலாகியிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் நடைபெறும் தேர்தல் உண்மையான மக்கள் தீர்ப்பாக அமையுமா என்பது சந்தேகமே. மொத்த வாக்காளர்களில் மிகக் குறைந்த வீதத்தினரே தமது வாக்குகளை அளிக்கும் நிலைவந்தால் அதனை ஜனநாயக வரன்முறைக்கு உட்பட்ட முழுமையான தேர்தலாகக் கொள்ள முடியுமா?

தேர்தல் ஒன்று நடத்தினோம் என்று உலகத்துக்குக் காட்டும் தேர்தலால் என்ன பயன்? உண்மையான ஜனநாயகம் அதுவல்லவே!

# குமரபுரம் படுகொலை விசாரணை ஆரம்பம்

## 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 21

மட்டக்களப்பு குமரபுரம் பகுதியில் 25 தமிழர்களைக் கொலை செய்ததாகவும் —

26 தமிழர்களைக் கொலை முயற்சி செய்ததாகவும் — குற்றம்சாட்டப்பட்டுள்ள 8 இராணுவத்தினருக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சென்ற வருடம் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த வழக்கில் 120 சாட்சிகள் அழைக்கப்பட்டனர்.

இவர்களில் மூவர் நேற்று முன்தினம் சாட்சியம் அளித்தனர்.

அடுத்த விசாரணை ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (இ-3)

## கல்விக் கல்லூரிப் பயிற்சிக்கான விண்ணப்பப் படிவங்களை சேகரித்து அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 21

கல்விக்கல்லூரி அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை ஒன்று சேர்த்து பரீட்சை ஆணையாளருக்கு அனுப்ப வலயம் ஒன்று கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்போர் தமது விண்ணப்பங்களை நேரடியாக எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன் வலயம் ஒன்று அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும்—

தபால் மூலம் வலயம் ஒன்றுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்றும்— வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-3)

## மன்னார்ப் பகுதிக்கு 2 வகையான விசேட அடையாள அட்டைகள்

கொழும்பு, மார்ச் 21

மன்னார் மாவட்டம் படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்ட பின்னர் அங்குள்ள மக்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் தீவில் உள்ளவர்களுக்கு இளம் நீல நிறத்திலும், பெருநிலப்பரப்பில் உள்ளவர்களுக்கு இளம் பச்சை நிறத்திலும், அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளன. (இ-3-150)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய சித்திரத் தேர் பவளக்கால் நடும் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.28 மணிக்கு நடைபெறும். (ஐ-117)

★ ★ ★

நாரந்தனை, சரவணை கர்ணன் தோட்டம் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோயிலின் சம்புரோச்சன கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

உடுப்பிட்டிஇமையாணனில் உள்ள பெரிய தம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளைமறுதினம் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 31 ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும்.

★ ★ ★

அன்ன சத்திர ஒழுங்கையில் உள்ள வேம்படி சித்தி விநாயகர் ஆலயஅலங்கார உற்சவம் கடந்த 14 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும். (ஐ)

★ ★ ★

யாழ். நீராவியடி தோப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில் வருடாந்த தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 00 மணிக்கும், தீர்த்தத்திருவிழா சனிக்கிழமை காலையும் நடைபெறும். (அ-30)

★ ★ ★

பண்ணாகம் விசவத்தனை ஸ்ரீ முருக மூர்த்ததி கோயில் வருடாந்த தேர்த்திருவிழா நாளை காலை விசேட அபிஷேகம், பூசை ஆராதனைகளை அடுத்து நடைபெறும். தீர்த்தோற்சவம் ஞாயிற்றுக்கிழமை காலையில் இடம்பெறும். (அ-30)

★ ★ ★

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா நாளை காலையும், தீர்த்தத் திருவிழா ஞாயிற்றுக்கிழமை காலையும், மாலை 4.40 மணிக்குகொடியிறக்கமும் நடைபெறும்.

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீ ஐயனார் கோயில் வருடாநத தேர்த் திருவிழா நாளை காலையும், தீர்த்தத் திருவிழா ஞாயிற்றுக்கிழமை காலையும் நடைபெறும். (அ-30)

★ ★ ★

தனங்கிளப்பு ஸ்ரீ பெரும்படை அம்மன் (மகாமாரி) அம்பாள் கோயில் வருடாந்த பெரும்பொங்கல் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறும். விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாட்டை அடுத்து பி. ப. 2.30 மணிக்கு நேர்த்திக் காவடி ஆட்டங்கள் இடம்பெறும். (அ-30)

★ ★ ★

இணுவில் ஸ்ரீ சிவகாமி அம்மன் கோயில் தேர்த்திருவிழா நாளை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து இடம்பெறும்.

தீர்த்தோற்சவம் ஞாயிறு காலை 9 மணிக்கு இடம்பெறும். (அ-30)

## விளையாட்டுப் போட்டிகள்

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசன் கலந்து கொள்வார். (ஐ-31)

## சேனைக் கூட்டம்

யாழ். சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயப் பங்கிலுள்ள ஆண்களுக்கான மரியாயின் சேனையாளரின் வாராந்தக் கூட்டம் பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெற்று வருகின்றது.

## நாளை

**பங்குனி 9**

**சனிக்கிழமை**

திதி: திரயோதசி காலை 6.59 வரை

நட்சத்திரம்: பூரம் முழுவதும்

சுபநேரம்: 03.17-04.47

ராகுகாலம்: 09.17-10.47

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# தாயிலும் சிறந்த தயவான தத்துவன்

உலகில் பெரிய இதயம், சிறந்த இதயம் யாரிடம் இருக்கிறது என்று கேட்டானாம் ஓர் அறிவாளி. குழந்தையைப் பெற்ற தாயிடம் தான் அது இருக்கிறது என்று பதில் கிடைத்ததாம்.

பத்து மாதம் சுமந்து பெற்று, பகலிரவாய் விழித்திருந்த வளர்த்து, வித்தகனாய் மேன்மை பெறச் செய்யும் தாய் உண்மையில் கண் கண்ட தெய்வமே யாவாள்.

சுய நலம் பாராட்டாது குழந்தையின் நலமே பெரிதெனப் பேணிக் காக்கும் தாயின் இதயம் அன்பால் உருவானது. அன்பு, அடக்கம் கருணை, கண்ணோட்டம், பொறுமை, சேவை, தியாகம், மன்னிக்கும் சுபாவம் ஆகியவற்றின் மொத்த உருவமே தாய்மை எனலாம். வேதனையைத் தாங்கி சாதனை புரியும் தாய்மை பாரதனில் ஆராதனைக்குரிய நடமாடும் தெய்வம். மாதா பிதா, குரு, தெய்வம் என்ற பட்டியலில் மாதாவுக்கு அடுத்த நிலையில் பிதா வைக்கப்பட்டிருப்பது மாதாவின் மகத்துவத்தை விளக்குவதாகும்.

### ஞானக்கதிர்

இதனால் தான் மேலும் ஆதி முதலை அம்மையின் உருவில் அருளாளர்கள் கண்டனர் எனலாம். தாயாகித் தாங்குகின்ற தயாபரன் என அப்பரம் பொருளை அவர்கள் அணுகி ஆனந்தப் பரவசம் உற்றனர்.

திருவாசகம் அருளிய மணிவாசகரும் முதற்கண் அம்மையே என்று தான் ஆதி முதலை விளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கு ஒருபடி மேலே சென்று தாயிற் சிறந்த தயவான தத்துவன் என்று சிவபுராணத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரம்பொருள் தாயினும் நல்ல தலைவன் என்பதே பெரும் பாலாரின் அபிப்பிராயமாகும். இறைவனது பெருங் கருணையை தாயின் அன்பிற்கு ஒப்பிடுவதன் மூலம், அவனது இயல்பான எளிமையான கட்டற்ற அன்பினை எம்மால் உணரமுடியும்.

தாயின் உள்ளம் பரந்தது; விரிந்தது. பெற்ற பிள்ளைகளை மாத்திரமன்றி மற்றப் பிள்ளைகளையும் பற்று மிகுதியால் உற்றவரென உறவு பாராட்டி அரவணைத்து இன்புறுவது தாய்மை உள்ளம்.

இது தாய்மையின் தனித்துவம். இதே போன்று அனைத்துச் சீவராசிகளையும் அணைத்து அவர்களை தனது அன்பில் நனைத்து, அவரவரை தனது நினைப்பில் நிறுத்தி வினைப்பயனை அனுபவிக்கச் செய்யும் மேலான இறையை தாய்மையின்சொரூபம் எனக் கூறுவது சாலப் பொருத்தமானதே. தாயிடம் சேய்கள் வருவதற்குத் தடையேதுமில்லை. எனவே தான் ஆன்மாக்கள் பரம்பொருளை நாடித்தேடி, ஓடி, கூடி, பாடி ஆடிப் பரவசமுறுகின்றன,

தாயவளாய் தந்தை ஆகிச்
சாதல் பிறத்தல்இன்றிப்
போயகலா மைந்தன்
பொன்னடிக்
கென்னைப் பொருந்த
வைத்த
வேயவனார் வெண்ணை
நல்லூரில்
வைத்தெனை ஆளுங்
கொண்ட
நாயகனார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

பித்தா என்றுஇறைவனைப் பிதற்றியவர் அத்தா உனக்கு நான் ஆட்பட்டேன் என்று சித்தம் ஒன்றி எத்தாலும் நான் இனி மறவேன் என்று உறுதி கூறி, தாயேயாகித் தண்ணளி காட்டிய முதல்வனை மேற்கண்டவாறு பாடினார் சுந்தரர்.

அன்னையாகி அருளுருவில் காட்சிதரும் தெய்வத்தை மருளகற்றி மாட்சிமைதரும் படி உருக்கமுடன் ஆண்டவனிடம் வேண்டினால் அவன் தாய் போலத்தந்தருள்வான்.

வாசுகி சிவராமலிங்கம்

## கோயில்களில் தேங்காய் உடைப்பது ஏன்?

உலகத்திலேயே சிறந்தது எமது உடல். அதிலும் சிறந்தது எமது சிரசு. (தலை) ''என்னிடத்தில் உள்ளவற்றுள் மிகப் பெறுமதி வாய்ந்ததையே உனக்கு அர்ப்பணிக்கின்றேன் இறைவா!'' என்று கூறித்தான் நாம் சிதறு தேங்காய் உடைக்கின்றோம். அத்துடன் எனது ஆணவத்தையும் அகந்தையையும் — இன்றுடன் ஒழித்து விடுகிறேன் என்று கூறுவது போலவும் ஆகிறது. தேங்காய் உடைத்தவுடன் அது சிரிக்கும் வெள்ளைச் சிரிப்பு ஓர் இன்பத்தையும், ஆன்மா உடலைப் பிரிந்து பெற்ற ஒரு தற்காலிக ஆறுதலையும் தருகிறது எனலாம்.

மேலும் தேங்காயின் முக்கண்ணும் ஒரு குடுமியும் அதன் தும்புகளும், உருண்டையாக ஓடு அமைந்துள்ளமையும் சிரசிற்கு உவமித்தது மிகப் பொருத்தம். உடைத்த தேங்காயைப் பின்னர் அதே வடிவத்தில் பெற முடியாது. அதேபோல் தலையைச் சிதறடித்தால் எல்லாமே போய் விடும். அத்துடன் தேங்காய் எப்பொழுதும் பெறக் கூடியது; இலேசில் பழுதாகாதது; பெறுமதி வாய்ந்தது என்று இதைப்பற்றி எழுதிக் கொண்டே போகலாம்.

இதேபோல இந்துமத தத்துவங்கள் மிக ஆழமானவை வாழ்வோடு இணைந்தவை.

அருந்ததி சதாசிவம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**ஸ்ரீமாவோவையும்...**

(முதலாம் பக்கத் தொடர்)

பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டது.

இந்தக் கொலைகள் மூலம் இலங்கையில் நெருக்கடியை ஏற்படுத்துவது புலிகளின் திட்டம் என்றும் —

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை கொலை செய்வது புலிகளுக்கு இலகுவானதாக இருக்கும் என்றும் — அந்தத்தூதுவர் தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதையடுத்து அமைச்சர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவின் பாதுகாப்பை அநுராவுக்கும் வழங்குமாறு இரகசியப் பொலீஸ் பணிப்பாளர் அந்தப் பிரிவுப் பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது பற்றிய தகவல் வெளியானதும் அநுராவும், ஸ்ரீமாவோவும், இரகசியப் பொலீஸாரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர் என்றும் —

காலியில் தங்கியிருந்த அநுராவை ஸ்ரீமாவோ இதற்காகக் கொழும்புக்கு அழைத்திருந்தார் என்றும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

# மனித உரிமை மீறலைக் கண்டித்து ஜெனிவாவில் தமிழர்கள் பேரணி!

லண்டன், மார்ச்21

ஐ. நா. மனித உரிமைக் குழுக் கூட்டத் தொடர் நடைபெறுவதையொட்டி, ஜெனிவாவில் சுமார் 4 ஆயிரம் தமிழர்கள் கலந்து கொண்ட பேரணி ஒன்று கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து நடத்தப்பட்ட இப்பேரணி 3 கிலோ மீற்றர் நீளத்தையுடையதாக இருந்தது என்றும் —

ஜெனிவா ஸ்ரேசனில் ஆரம்பித்த பேரணி ஐ. நா. தலைமையக சதுக்கத்தில் முடிவடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் வடக்கு — கிழக்குப் பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேறவும் —

இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் — இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரும் மகஜர் இப்பேரணி இறுதியில் ஐ நா. மனித உரிமைக்குழு தலைவரிடம் கையளிக்கப்பட்டது. (இ-3-150)

## விவேகானந்தர் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 21

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழா தொடர்பான நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா அங்கு உரையாற்றுவார். (ஐ)

**காணாமல்போன...**

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தக் ஹெலி நடு வானில் வெடித்துச் சிதறியதாக வன்னியில் இருந்து வெளிவரும் 'ஈழநாதம்' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டது.

ஆனால் பாதுகாப்பு வட்டாரங்கள் இதனை ஏற்கத் தயாரில்லை என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் ஹெலி தொடர்பாக புலிகள் எதையோ மறைக்க இப்படி செய்தி வெளியிட்டிருக்கலாம் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் விமானிகளுடன் ஹெலியைப் பிடித்து வைத்துள்ளதாகக் கொழும்பில் பேச்சடிபடுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவுப் பகுதி கடலில ஹெலி வீழ்ந்ததாகவும்—

விமானப் படையும், கடற்படையும் தேடுவதாகவும் — பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதிக்குத் தகவல் கொடுத்திருந்தது.

ஆனால் இந்தக் ஹெலி கடலில் வீழ்ந்ததுக்கான அறிகுறி எதுவும் காணப்படவில்லை என்றும் —

கடலில் வீழ்ந்திருந்தால் எண்ணெய்ப்படலம் மிதந்திருக்கும் என்றும் -- படை வட்டாரங்களில் இருந்து தெரிய வந்ததாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் ஹெலியில் 3 விமானிகள் இருந்ததாக முன்னர் செய்திகள் வந்த போதும் 2 ரஷ்ய விமானிகள், ஓர் இலங்கை விமானி உட்பட 7 பேர் இருந்ததாக பின்னர் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பலாலியில் இருந்து இரு 'எம். ஐ. 24' ரக ஹெலிகள் முல்லைத்தீவில் புலிகள் நிலைகள் மீது தாக்குதல் நடத்தச் சென்றன என்றும் —

தாக்குதல் நடத்தி விட்டு இரு ஹெலிகளும் திரும்பி யாழ். கடலேரிக்கு மேலாக வந்து கொண்டிருந்ததாகவும் —

ஒரு ஹெலி பலாலியில் இறங்கிய பின்பே மற்றைய ஹெலி காணாமற் போன விடயம் தெரிய வந்ததாகவும் — மற்றொரு பத்திரிகை செய்தி தெரிவித்தது

30 கோடி ரூபா பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படும் அந்தக் ஹெலியில் ஏவுகணை ஒன்றும், ஏவுகணை எதிர்ப்புக் கருவி ஒன்றும், 50 கலிபர் பீரங்கி ஒன்றும் பொருத்தப்பட்டிருந்தன என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (இ-3-150)

## கௌடா பேசவிருந்த கூட்டத்தில் கைக்குண்டுடன் ஒருவர் கைது!

### பாட்னா காந்திமைதானத்தில் சம்பவம்

புதுடில்லி, மார்ச் 21

பாட்னா நகரில் ஜனதா தள் கட்சி ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுவதற்கு இந்தியப் பிரதமர் எச். டி. தேவகௌடா வர இருந்த வேளையில் —

கூட்டம் நடக்க இருந்த பகுதியில் கைக்குண்டு ஒன்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பாட்னா நகரில் உள்ள காந்தி மைதானத்தில் வைத்து கிரிஜா பிரசாத் என்ற இந்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார், (ஐ)

## பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 21

1997 ஆம் ஆண்டுக்கான ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் வலயம் ஒன்றின் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை விண்ணப்பங்களை ஒன்றுசேர்த்து பரீட்சை ஆணையாளருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நாளை

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை காலையும், தீர்த்தத் திருவிழா ஞாயிறு காலையும் நடைபெறவுள்ளன. (அ-30)

★ ★ ★

வியாபாரிமூலை ஸ்ரீ பத்திரகாளி சமேத ஆதி சிவ வீரபத்திர சுவாமி கோயில் வருடாந்த தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை நடைபெறும். ஞாயிறன்று உதயத்தில் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். (அ-30)


உ

**திருமண அழைப்பு**

மணமகன்: திருநிறைசெல்வன் **ஜெயக்குமார் (ஜெயா)** ★ மணமகள்: திருநிறைசெல்வி **கிரிசாம்பாள் (கௌரி)**

திருமண நாள்: 22 — 03 — 1997 சனிக்கிழமை

சுப நேரம்: காலை 10. 47 மணி முதல் 11. 25 மணி வரையான காலம்.

இடம்: யாழ். வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் (நாச்சிமார் கோயில்) ஆலய கல்யாண மண்டபம்.

அன்பர்கள் நண்பர்கள் அனைவரும் வந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கும்

திரு. கதிரவேல், 654/2 காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடி.

திரு. திருமதி குமாரசாமி, நாவற்குழிகிழக்கு, கைதடி.

★ இரு வீட்டார் அழைப்பு ★

(45928)



உ

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கப்

**பொதுக் கூட்டம்**

இடம்:- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

காலம்:- 23-03-97 ஞாயிற்றுக்கிழமை காலை 9. 00 மணி

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நா. வேதநாயகன்
பிரதேச செயலர்,
சண்டிலிப்பாய்.

பிரதேச செயலகம்
சண்டிலிப்பாய்.

(9416)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**மெய்வல்லுநர் போட்டி 1997**

இடம்:- கல்லூரி மைதானம்

காலம்:- 1997- 03- 21 பிற்பகல் 1.00 மணி

தலைமை:- திரு. க. இராசதுரை (கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்:- திரு. சு. இரத்தினராசா (கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம் i)

பெற்றோர், பழையமாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

(சி/351)


**940 பயணிகள்...**

(முதலாம் பக்கத் தொடர்)

செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 546 க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது. (இ-3)


**ரதி குங்குமம்**

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட ரதி குங்குமம் பெட்டி ரூபா 32/- விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்;

**கல்யாணி,**
9, நவீன சந்தை,

(சி/353)


**மிகப் பலத்த...**

(முதலாம் பக்கத் தொடர்)

ரோந்து சேவையில் ஈடுபடுவர்.

**வேண்டுகோள்**

இதேவேளை, ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் தனித் தனியாக நாட்டு மக்களுக்கு விடுத்த வேண்டுகோள்களில் அமைதி காக்குமாறு கேட்டுள்ளனர்.

தேர்தல் நீதியாகவும், அமைதியாகவும் நடைபெற மக்கள் ஜனநாயக முறையில் தமது வாக்குகளை அளித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாட்டின் மதிப்பைப் பாதுகாக்கும் வகையில், வன்செயல்களில் ஈடுபடாது அமைதியாக தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும் என்று அவர்கள் இருவரும் கேட்டுள்ளனர்.

**வன்முறைகள்**

உள்ளூராட்சி தேர்தலையொட்டி நேற்றுவரை ஆயிரத்து 865 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

இவற்றில் 818 தேர்தல் வன்முறை முறைப்பாடுகளை ஐ. தே. கவும்—

751 தேர்தல் வன்முறை முறைப்பாடுகளை பொ. ஐ. முன்னணியும் பதிவு செய்துள்ளன.

மக்கள் விடுதலை முன்னணி 109 முறைப்பாடுகளைச் செய்துள்ளது. கொலை முயற்சி குறித்தும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை நகர சபை தலைமை வேட்பாளர் நேற்று துப்பாக்கித் தாக்குதலுக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டது.

**வாக்களிப்பு**

நாட்டில் உள்ள 238 உள்ளூராட்சிச் சபைகளுக்கு 3 ஆயிரத்து 568 பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

இத்தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவிருக்கிறது.

12 பிரதான அரசியல் கட்சிகளும் 138 சுயேச்சைக் குழுக்களும் 12 மாநகர சபைகள், 32 நகரசபைகள், 195 பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

இன்று நடைபெறும் தேர்தலில் 97 லட்சத்து 30 ஆயிரத்து 958 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள் - மொத்தம் 8 ஆயிரத்து 148 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தேர்தலில் 18 ஆயிரத்து 579 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

**முடிவுகள்**

தபால்மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் வேலை இன்று பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.

ஏனைய வாக்குகள் இரவு 8 மணி முதல் எண்ணத் தொடங்கப்படும். தேர்தல் முடிவுகள் இரவு பத்துமணி தொடக்கம் வெளிவர ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

''இன்ரநெட்'' தொலைத் தொடர்பின் மூலம் வெளிநாடுகளிலும் உடனுக்குடன் தேர்தல் முடிவுகளை அறிய முடியும்.

இதற்கான ஏற்பாடுகளை தகவல் திணைக்களம் கொழும்புப் பல்கலைக்கழக கணனிப் பிரிவுடன் சேர்ந்து செய்துள்ளது. (அ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இல் உள்ள அவர்களது பணிமனையில் 21- 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org